(1889)

# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு | ரூ. | 5-60 |
| வெளியூர், இந்தியா: ,, | ரூ. | 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: ,, | ரூ. | 9-40 |
| தனிப்பிரதி: | சதம் | 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | |
|---|---|
| முதன்முறைக்கு:—ஒருகலம் | ரூ. 9-40 |
| ,, அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, கானற்கலம் | ரூ. 3-15 |
| ,, ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.

விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௫. } யாழ்ப்பாணம்:—இரத்தாட்சிஞு வைகாசிமீ ௨0௨ (1924 ஜூன் 2) திங்கட்கிழமை. { இலக்கம்—௬௧.


உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர்தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் ருேது
மதம்பூத்தவிநாயகன்ருள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## புத்தக விளம்பரம்.

தெல்லிப்பழை பிரமஸ்ரீ வித்துவான் சிவானந்தையரால், இயற்றிய புத்தகங்கள் என்னிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. தருக்கசங்கிரகம், நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம், நீலகண்டீயம், சேர்ந்த கட்டுவிலை ரூபா 2 00
2. நம்பி அகப்பொருளுரை ரூபா 1 00
3. இரகுவமிசம் மூலமும் உரையும் முற்பாகம் ரூபா 1 சதம் 50
4. சனிதுதி விலை அணா 1
5. தசகாரியம் அணா 5

ச. செல்லம்ஐயர்,
சிவன்கோவில் வடக்குத்தெரு,
வண்ணார்பண்ணை.

சண்முகநாதன் புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம். (H. 26.)

"ஸ்ரான்டேர்ட்"

## கொழுக்கியோடுகள்.

## (Standard Tiles)

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ரான்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றேம்:—

முதலாவது, இந்தஓடுகள்மிகப்பாரங்குறைந்தனவும்.

இரண்டாவது, இவைகள்நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றவது, இந்த வட இலங்கையின் தேச சுவாத்தியத்திற்கு இயைந்தஓடுகள்இவைகளே யாம். இந்த ஓடுகள்உஷ்ணகாலங்களிற்குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற மூன்றுவருடகாலமாக நாம் தருவித்து விற்றுவருகின்றேம். இந்த மூன்றுவருட காலத்துள் நாங்கள் ஆச்சரியப் படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இது சிறந்ததென் பதற்கு இந்த ஒருநியாயமுமே போதிய சான்ருகும்.

ஓடுகள்யாழ்ப்பாணத்திலும் வல்லுவெட்டித் துறையிலும், பருத்தித்துறையிலும் எங்களிடம் பெறற்பாலன.

S. வீரசத்திப்பிள்ளை.

தந்திவிலாசம்,
"Ruby" வல்லுவெட்டித்துறை
(H. 25.)

## புத்தக விளம்பரம்.

(தபாற்செலவு வேறு).

| | ரூ. | சத. |
|---|---|---|
| பாரதம் ஆதிபருவவுரை | 3 | 25 |
| டை சபாபருவவுரை | 2 | 25 |
| டை இரண்டும் ஒரே முறையில் | 5 | 00 |
| தொல்காப்பியம் எழுத்ததிகாரம்-நச்சினார்க்கினியம் | 4 | 50 |
| டை சொல். சேனாவரையம் | 4 | 00 |
| அகப்பொருள் விளக்கவுரை (குமாரசுவாமிப்புலவர்பதிப்பு) | 1 | 75 |
| டை சிவானந்தையர் பதிப்பு | 1 | 00 |
| இலக்கியச் சொல்லகராதி | 1 | 75 |
| சித்தியார் சுபக்கம் இருவருரை | 5 | 00 |
| டை மு. திருவிளங்கம் பதிப்பு 4-பகுதிகள் | 2 | 10 |
| திருவுந்தியார், திருக்களிற்றுப் படியாருரை | 0 | 50 |
| தத்துவப்பிரகாசவுரை | 1 | 75 |
| திருக்குறள் சரவணப்பெருமாளையருரை | 3 | 75 |
| இரகுவமிசவுரை (முதற்பாகம்) | 1 | 50 |
| தருக்கசங்கிரகம் | 2 | 00 |
| ஜாதகபாஸ்கரன் | 3 | 50 |
| இராமாயணநாடகம் | 2 | 25 |
| இராமாயணம் பாலகாண்டம் அரும்பதவுரை | 2 | 00 |

விலாசம்:— மானேஜர்,
சோதிடப்பிரகாசயந்திரசாலை,
(Q. 47.) கொக்குவில், யாழ்ப்பாணம்.




அநேகபரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது. 25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ் அண்டு மருந்து கண்காக்ஷியில் பஸ்ட்கிளாஸ்(முதல்தர) தேவஔஷதங்களென தங்கமெடலும், வைத்தியபதி-பட்டமும்பெற்ற

# குரு தாம்பர பஸ்பம்.

முப்புவினுல் தளுக்கர நீற்றியது. களிம்பற்றது. வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது, பத்தியமில்லை. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

பலனில்லாவிடில் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். மறுமுறை வியாதி திரும்பிவராது. இது சகல வியாதிகளையும் வேரற நீக்கும் சக்தி வாய்ந்தது.

சூலை, குஷ்டம், திமிர், ரணம், மதமதப்பு, தடிப்புகள, கிரந்திகள், பத்துக்கள், கைகால் ரணங்கள், குன்மம், மேகம், பவுந்திரம், கண்டமாலை, சூலைநீர், முதலியன நீங்கும்.

குறைநோய் சம்பந்த வியாதிகள், விரல்கள் அழுகிப்போயிருந்தாலும் சரி, அம்மட்டில ஆறிவிடும். இது குஷ்டம், கருமேகம், வெண்மேகம், செம்மேகம் முதலியவைகளுக்கு மகா அருமையானது. இதுபோன்ற மருந்து எங்கும் கிடைப்பதரிது.

100-வேளை ரூ. 50. 50-வேளை ரூ. 25. 20-வேளை ரூ. 10.

ஏழை என்று ருபிப்பவர்களுக்கு பாதி விலை. வி. பி. சார்ஜ் வேறு.

வீரியவிர்த்திக்கு நிகரற்ற

## மன்மத கோலாகல குளிகை.

அபூர்வ சக்தி வாய்ந்தது!! ஆச்சரியமான குணமுள்ளது!!
புதிய நலத்தைக் காட்டும் போன பலத்தை மீட்கும்
ஒரு முறை பரீக்ஷிக்கவும்!! அதை இன்றே பார்க்கவும்!!

வீரியவிர்த்திக்கு இது நிகரற்றது. இதற்கு ஈடான மருந்து புவியிலெங்குமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, போகசக்திக்குறைவு முதலியவைகள் நீங்கி நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி உண்டாகும். வீரியக்கட்டும், இழந்த பலமும், ஆண்மையுந் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. பரிசைகூடிக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

120 குளிகை ரூ. 10 60 குளிகை ரூ. 5. 30 குளிகை ரூ. 3. மாதிரிக்கு 20 குளிகை ரூ. 2. வி. பி. சார்ஜ் வேறு

திருச்சி கா. யி. மு. இப்ராம்ஸா 3-1-23-ல் எழுதுகிறுர்:

தங்கள் மன்மதகோலாகல குளிகையை சாப்பிட்டதில் ரத்தத்தை சுத்திசெய்து நரம்பு தளர்ச்சியை நீக்கி நல்ல பலத்தையும் வீரிய விருத்தியையும் கொடுத்து உற்சாகத்தையும் இன்பத்தையும் தருகிறது. இன்னும் 3-ரூபாய் குளிகை வி. பி. யில் அனுப்பவும்.

சித்த ஆயுர்வேத டாக்டர்

**C. மலையப்பசாமி பிள்ளை,**

நித்தியானந்த மெடிகல் ஹால், பழனி, S. I.

(Q. (A) 46)

குளிர்! குளிர்!

## கம்பளிப் போர்வைகள்.

அசல்கம்பளி மிருதுவானது; நீடித்து உழைக்கக்கூடியது;
குளிருக்கு அடக்கமானது; பலவித கலர்களில் கிடைக்கும்;

1ம் நம். போர்வை விலை ரூபா 11.
2ம் நம். ,, ,, ரூபா 10.
3ம் நம். ,, ,, ரூபா 8 அணா 8.

கே. எஸ். முத்தையா & கம்பனி,
"வெல்க் ஹவுஸ்" காசி.

(Y. 29.)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

—o—

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் வண்-கிழக்கு பெ. அசி. மு. அரு. அருணசலம் செட்டியாரிடம்அடை வுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி டை சட்டத்தின் 12-ம் பிரிவின்படிபிரசித்த ஏலத்தில் விற்கவேண்டிய நகைகளின் விபரம்.

| நம் | மாத. | திக. | ரூபா | ஊர் | பெயர் | நகைவிபரம் |
|---|---|---|---|---|---|---|
| 1922ஞு | | | | | | |
| 1349 | செப்டெம். | 2 | 30 | பறங்கித்தெரு | மரியாம்பிள்ளை செல்லத்துரை | பொன்சங்கி. 1 |
| 1366 | ,, | 7 | 62 | ஆனைப்பந்தியடி | சதாசிவம் தம்பாபிள்ளை | பொ.சங்கிலிக்கொடி1 |
| 1477 | அக்டோபர் | 5 | 85 | சின்னக்கடைத்தெரு | உகா அபுதுல்றகுமான் | பொன் கடயம் சோடி 1 |
| 1622 | நவம்பர் | 23 | 65 | வண்-மேற்கு | சின்னத்தம்பி விசுவலிங்கம் | பொன் முகப்புப் பதக்கமுடன் கம்பிப்பூரானட்டியல் 1 |
| 1661 | டிசம்பர் | 12 | 65 | நாவடி | தம்பிப்பிள்ளை கந்தையா | பொன் பீலிக்காப்பு சோடி 1 |
| 1681 | ,, | 22 | 90 | கன்னுதிட்டி | அப்புக்கண்ணுப்பத்தர் நாகலிங்கப்பத்தர் | பொன் செட்டிக்கொலுசு 1, கல்வைத்தகொலுக். 1 |
| 1923ஞு | | | | | | |
| 1719 | செனவரி | 8 | 75 | கொக்குவில்-கிழக்கு | இராமநாதர் தம்பையா | பொன் கம்பிப்பூரானட்டியல் 2 |
| 1724 | ,, | 11 | 20 | கந்தர்மடம் | சிதம்பரப்பிள்ளை கார்த்திகேசு | பொன் உருணடை மோதிரம் 6 |
| 89 | பிப்ரவரி | 21 | 20 | ஆனைப்பந்தியடி | ச. நமசிவாயம் | பொன் கல்வைத்தமோதிரம் 1 |
| 130 | மார்ச்சு | 4 | 320 | வண்-மேற்கு | நாகேந்திரஐயர் ராமசாமிஐயர் | பொன் பூக்காப்பு சோடி 1, பீலிக்காப்பு சோடி 1, சங்கிலி அட்டியல் 1, கல்லில்லாத மோதிரம் 1, கைச்சங்கிலி 1 |
| 156 | ,, | 12 | 100 | சோனகதெரு | மீருமெய்யத்தின் சேகுசுலுத்தானபுதல்காதர் | பொன் பட்டணங்காப்பு சோடி 1, நீராயகம் பதக்கத்துடன் கம்பிப்பூரான் அட்டியல் 1 |
| 157 | ,, | 12 | 40 | சோனகதெரு | காதர் உசன் முகம்மது முகய்யதீன் | பொன் கலாவரை மோதிரம் 1, வெள்ளிப்பாதசரம் 2 |
| 158 | ,, | 12 | 150 | சிறும்பியடி | வைத்திலிங்கம் பொன்னுச்சாமி | பொன் தாலிச்சங்.1 |
| 173 | ,, | 16 | 60 | வேலணை-கிழக்கு | ஆறுமுகம் இளையதம்பி | பொன் கொலி. சோ.1 |
| 215 | ,, | 29 | 15 | வண்-கிழக்கு | கார்த்திகேசு இராமு | பொன்தோடு சோடி 1 |
| 233 | ஏப்பிரல் | 3 | 25 | வண்-மேற்கு | வைத்திலிங்கம் சுப்பிரமணியம் | பொன் சங்கிலி 1, மோதிரம் 1 |
| 250 | ,, | 7 | 12 | வண்-கிழக்கு | நாகேந்திரஐயர் ராமசாமிஐயர் | வெள்ளி காற்சங்கிலி சோடி 1 |
| 277 | ,, | 19 | 170 | கொழும்புத்துறை | சிவசிதம்பரம்பிள்ளை செல்லப்பாபிள்ளை | பொன் பாவற்கொட்டைமாலை 1, அச்சரக்கூடு கோத்த குண்டுச்சங்கிலி 1 |
| 280 | ,, | 22 | 25 | சோனகதெரு | சுலைபுமான் நாகை காயற் முகம்மது அப்துல்காதர் | வெள்ளிப்பாதசரம் 2, தண்டை 2 |
| 289 | ,, | 25 | 25 | வண்-கிழக்கு | கார்த்திகேசு துரையப்பா | பொன் முகப்பில்லாத குண்டுச் சங்கிலி 1 |
| 293 | ,, | 26 | 60 | கந்தர்மடம் | விசுவலிங்கம் கந்தரம்பிள்ளை | பொன் பட்டணங்காப்பு சோடி 1 |
| 316 | மே | 5 | 100 | பெருமாள்கோவிலடி | நாகப்பசெட்டி பெருமாள் | பொன் பட்டணங்காப்பு 2, சங்கிலி அட்டியல் 1 |
| 318 | ,, | 5 | 35 | கன்னுதிட்டி | மாணிக்கம்பிள்ளை ஏகபரம்பிள்ளை | பொன் கம்பிப்பூரான் அட்டியல் 1 |
| 320 | ,, | 6 | 11 | வண்-கிழக்கு | அருணசலஞ்செட்டி தியாகராசா | பொன்வெள்ளைக்கல் கடுக்கன்சோடி 1 |
| 332 | ,, | 7 | 70 | ஓட்டுமடம் | செல்லையாப் பங்கார அம்மான் | பொன் சவிணுப்பவுண 1, சங்கிலி 1, வெள்ளிப்பாதசரம் சோடி 1 |
| [illegible]51 | ,, | 10 | 50 | செட்டித்தெரு | அருணசலஞ்செட்டி தியாகராசா | பொன் சிகப்புக்கல் தோடு 2, வெள்ளைக்கல்தோடு 2 |
| 363 | ,, | 16 | 60 | நீர்வேலி | வயிரவநாதர் ஆறுமுகம் | பொன் பீலிக்காப்பு சோடி 1 |
| 368 | ,, | 17 | 25 | செட்டித்தெரு | அருணசலஞ்செட்டி தியாகராசா | பொன் பதக். 1 |

விற்பனவு:—ரத்தாக்ஷிஞு வைகாசிமீ 25-ந்திகதிக்குச்சரியான 1924ஞு ஜூன்மீ 7உ சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் டை கடையில் எடுபட்ட நகை பிறீங்கலாக பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

லெட்டிஸ்ஸோல்தர்,
அரு. செல்லையாஉடையார்,

(Mis 485.)

# இந்துசாதனம்

யாழ்ப்பாணம்:—இரத்தாட்சிஞு வைகாசிமீ 20உ திங்கட்கிழமை.

## மகாசனக் கூட்டம்.

யாழ்ப்பாணத்திற் சிலகாலமாக மொட்டர்ரதங்களால் விளைந்துவரும் சீவமோசத்தையும் பேராபத்துக்களையும் தவிர்த்தற்கான மார்க்கங்கள் எவை என்பதைச் சிந்தித்து, சில நிர்ணயங்களை நிறைவேற்றி அவற்றை அநுசரிக்கும்படி அரசினருக்கு விண்ணப்பஞ் செய்யும் நோக்கமாக, முற்றவெளியில் றீஜேவ மண்டபத்திற்கணித்தாக, வருகிற சனிக்கிழமை பின்னேரம் நாலுமணி வரையில் மகாசனக் கூட்டமொன்று கூட்டப்படுமென அறிகின்றேம். இப்படிப்பட்ட ஒரு மகாசபை ஆவசியகம் கூட்டப்படல்வேண்டுமென யாமும் இப்பத்திரிகை வாயிலாக வெளியிட்டுள்ளோம். இவ்வாறு ஒரு மகாசபை கூட்டி எங்கள் குறைகளை அரசினருக்கு முறையிட்டாலன்றி, மொட்டரத விஷயமாக இங்குள்ள சனங்களினுள்ளத்தில் உண்டாயிருக்கும் திகில் ஒருபோதும் மாறாது. சிரமம் பாராட்டாது, யாழ்ப்பாணததின் எல்லாப் பகுதிகளில் வசிப்பவர்களும் இக்கூட்டத்திற்குச் சமுகஞ் செய்தல் நன்றாம். இக்கூட்டத்தில் விசேஷமாக யோசிக்கப்படவேண்டிய விஷயங்கள் சிலவற்றை இங்கே யாமுங் காட்டுகின்றேம். சனச் சஞ்சாரமான இடங்களிலே மொட்டர் ரதஞ் செல்லும்போது ஒரு மணித்தியாலம் எட்டுமைல் விகிதத்திற்கு மேற்படச் செல்லவொண்ணாது. பட்டின பரிபாலன சங்க எல்லையுள், அபாயகரமான நாற்சந்திகளிலும் தெரு வளைவான இடங்களிலும் பொலிசர் நின்று ரதங்கள் செல்லவேண்டிய முறையைக் காட்டவேண்டும். மொட்டரதஞ் செலுத்துவோருக்கு இங்குள்ள உத்தியோகத்தர் அநுமதி (லீஸன்ஸ்) கொடுத்துவருதலாகிய வழக்கத்தை முற்றாகத் தவிர்த்து, கொழும்பில் அதிக திறமை வாய்ந்தவர்களே, மொட்டர் செலுத்தும் அநுமதியை உதவும் உத்தியோகத்தர்களாக நியமிக்கப்படுதல்வேண்டும். இராக்காலங்களிலே இரதங்களில்ஏற்றப்படும் வெளிச்சம் வழிச்செல்வோரின் பார்வையை அதிகம் மழுங்கச்செய்யும் அத்துணைப் பிரபையுள்ளதாக ஏற்றப்படவொண்ணாது. கொழும்பிற் செய்யப்படுதல்போல, ரதத்தின் மேல் வெளிச்சத்தை ஒருவாறு குறைத்துக்கொள்ளுதல்வேண்டும். யாழ்ப்பாணத்துள்ள தெருக்கள் மிகவும் ஒடுங்கியனவாயிருத்தலினாலே, அதிக ஒடுக்கமான குறுக்குத் தெருக்கள் மார்க்கமாக மொட்டர் ரதம் போக்கு வரவு செய்யாதவண்ணந் தடுத்தல்வேண்டும். இவற்றையும் இவை போன்ற வேறு பிரயோசனமுள்ள நிர்ணயங்களையும் குறித்த மகாசனக் கூட்டத்தில் நிறைவேற்றுதல்வேண்டும்.

பட்டின பரிபாலன சங்கத்தாரும் பொலிஸ் பகுதியாரும் ஐக்கியப்பட்டு, பட்டினத்தின் க்ஷேமத்தின்பொருட்டும் பாதுகாப்பின்பொருட்டும் உழைக்க முடியாதவர்களாக விருக்கின்றார்களென்றும் பட்டின பரிபாலன சங்கத்தார்மீது பொலிசர் அதிகாரஞ் செலுத்துவதோ இன்றேல் பொலிசர்மீது பட்டினபரிபாலன சங்கத்தார் அதிகாரஞ் செலுத்துவதோ யார் மேல் யார் கீழ் என்ற சந்தேகத்தை இருபகுதியாரும் தீர்த்துக்கொள்ள முடியாது இடர்ப்படுவதனாலேதான் இங்கே பரிபாலனம் வாய்க்கவில்லையென்று பலர் அபிப்பிராயப்படுகின்றார்கள். ஆதலினால் இப்பொழுது கூட்டப்படவிருக்கும் மகாசனக் கூட்டத்தில் இச்சந்தேகத்தையும் நீக்கிக்கொள்ளுதல்வேண்டும்.

## நவீனநூல்களும் நூலாசிரியரும்.

ஒரு நூலை இயற்றியேனும் பரிசோதித்தேனும் அச்சிட்டு வெளியிடுதல் உலகினர் அதனை வாசித்து அறிந்து நன்மை பெறுதற்பொருட்டேயாம். அந்நூலை இயற்றும் ஆசிரியர் சிறந்தகல்வியறிவுடையவராயும், தகுந்த அநுபவமுள்ளவராயும், தமக்குமுன் அவ்வித் நூலையியற்றிய ஆசிரியரின் கொள்கைகளுக்குமாறுபடாத முறைகளைத் தழுவுபவராயும் இருத்தல் வேண்டும். பண்டைக் காலத்திலுள்ள ஆசிரியர் எவ்விதக் கல்வியறிவும் அநுபவமுமுடையராயினும் உலகத்துக்கு நன்மை பயக்கும் ஒரு நூலை இயற்ற ஆரம்பித்தற்குப் பெரிதும் அஞ்சுவர். அந்நூலை இயற்றுவதற்குத் தமது கல்வியறிவும் உலக அநுபவமும் சிறிதேனும் போதியனவல்லவென்று சிந்திப்பர். ஒருகால் இயற்றும் அந்த நூல் உலகோர்க்கு விபரீத முறையைப் புகட்டிவிடின் அந்த முறையைக்கொண்டு ஒழுகுவோர் செய்யும் தீச் செயல்களினால் அவர்களுடையும் பழியும் பாவமும் தமக்கு வந்து சேருமே யென வருந்துவர். பின்னர் உலகம் கல்வியறிவின்மையினால் தீயவழிகளைப் பின்பற்றுதல் கண்டு சகியாது அதனை [illegible]ட்டற்றும் பொருட்டு ஓர் நூலை இயற்ற[illegible]டுமென முயலுவர். அந்நூல் இடையூ[illegible]றி இனிது நிறைவேறுமாறு திருவருளை வேண்டுவர்; தம்மிலும் மேம்பட்ட பெரியோருடைய ஆசீர்வாதத்தைக் கோரிநிற்பர்; கடவுள் சந்நிதானத்திற் பழிகிடப்பர். கடவுள் அநுக்கிரகம் பெற்றபின்னரே தமது நூலை இயற்ற ஆரம்பிப்பர். சமயகுரவருள் ஒருவராகிய சுந்தரமூர்த்திசுவாமிகள் தாம் கல்வியறிவு, ஈசுரபத்தி, சிவகாருண்ணியம் முதலானஉத்தமகுணங்கள் வாய்ந்திருந்தும், அந்தப்பரம்பொருளாகிய சிவபெருமானால் மாற்சாரசம்பந்தமாகத் தடுத்தாட்கொள்ளப்பட்ட பெறற்கரும் பெரும் பேற்றைப் பெற்றும், சிவபெருமான் தமது அருமைத்திருவாய் மலர்ந்து "அன்பனே! நீ சிவாலயங்கள் தோறும் சென்று பதிகம்பாடுதி" என ஆஞ்ஞாபித்தருளியும் பதிகம்பாடும் சக்தியின்றிச்சிவபிரான் அடிபெடுத்தருளியபின்னரே பாடினர். இன்னும் கச்சியப்பசிவாசாரியர், சேக்கிழார்நாயனர் முதலானோரும் பரம்பொருள் அடியெடுத்தருளிய பின்னரே நூலியற்றத்தொடங்கினர். பின்னரும் அநேகர் திருவருளை முன்னிட்டு ஆரம்பித்தனர். அந்நூல்கள் என்றும் களங்கமின்றி உலகத்துக்குப்பெருநன்மை பயந்து கொண்டுவருகின்றன.

இவற்றை ஒரு சிறிதும் சிந்தியாது இக்காலத்து அற்ப கல்வியறிவுடையோர் பெரும் பான்மையும் தீமைபயப்பனவாகிய நூல்களைச்சிறிதும் யோசனையின்றி இயற்றவும், அச்சிட்டு வெளியிடவும் ஆரம்பித்து விடுகின்றனர். உயர்ந்தோர் மாட்டுள்ள உலகம் இவர்களுடைய நூதன நூல்களைக்காணவும் அருவருக்கின்றது. இந்த நவீன ஆசிரியர் இயற்றும் நூதன நூல்கள் ஆன்றோர் இயற்றிய நூல்கள் கூறும் சிறந்த கொள்கைகளை மிகவும் கிஞ்ரேமாக முரணுகின்றன. ஆன்றோரியற்றிய நூலுணர்ச்சியிற் குறைந்தவர்களை இதுவோ அதுவோ என்றுதேறித் தெளிந்து கொள்ளக் கூடாத பிரகாரம் பெரிதும் மலைக்கச் செய்து விடுகின்றன. இவ்விதமான நூதன நூல்கள் தமது ஆசிரியருக்குப் பேரவமானத்தையும் பெரும் பாவத்தையும் கொடும் பழியையும் விளைவிப்பனவேயன்றி ஆன்றோரியற்றிய உண்மை நூற்கொள்கைகளை ஒரு சிறிதும் இடறமாட்டாவாம். படர்ந்த பெரு மரங்கள் செருங்கிய காட்டின் ஓர்கோணத்திலுள்ள மரங்களிலொன்று தறிக்கப்பட்டபின்; ஒருவன் கண்கட்டி விடப்பட்ட குதிரை போலச் சென்று பார்வையிட்டு, அந்தக் காட்டில் மரம் ஒன்றேனுமில்லையென்றும், அது ஓர் பாலைவனம் என்றும் சொல்லுவதுபோல, சிலர் இந்தவிதமான நூதன நூல்களைப் பார்வையிட்டுப் பெருமிதங்கொண்டு ஆன்றோரால் இயற்றப்பட்ட நூல்களும் அவைகள் கூறும் கொள்கைகளும் தவறானவையென்றும், இந்த நூதன நூல்களே சரியானவையென்றும் முன்பின் யோசனையின்றித் தீர்மானித்து விடுகின்றனர். தாம் அறிவின்மையினாற் கொண்டுள்ள கொள்கைகளைத் தம்மளவிலேனும் வைத்துக்கொள்ளாது உலகிற் பரப்பவும் ஆரம்பித்து விடுகின்றனர். நவீனக் கொள்கைகளையுடைய மேல் நாட்டாரும் பிறரும தமது கொள்கைகள் தவறானவையென உணர்ந்து கீழ்நாட்டு முறைகளைக் கைக்கொள்ள முயன்றுவரும் இக்காலத்தில் நம்மவர்களிற் சிலர் கீழ்நாட்டுக் கொள்கைகள் தவறானவையென வெண்ணி அவற்றை விடுத்து மேல்நாட்டு முறைகளைத் தழுவ முயலுதலே எல்லாவற்றிலும் நூதனமாகும்.

## ஒரு ஞாபக சின்னம்.

"உப்பினருமை ஒழிந்தாற்றெரியும்" என்றாற்போல, தேசகைங்கரியஞ் செய்த பெரியோரின் அருமை அவர்கள் இல்லாத காலததிலேயே நன்கு விளங்கும். காலஞ்சென்ற ஸ்ரீமாந் சபாபதியவர்கள் ஏறக்குறைய ௪0 வருட காலமாக நமது தேசஈடேற்றத்தின்பொருட்டுப்பலதுறைகளில் நின்று உழைத்துவந்தாரென்பது, அ[illegible] தேசவியோகமான இந்தச் சமையத்[illegible]லேயே நன்கு அறியக் கிடக்கின்றது. யாழ்ப்பாணம் கொழும்பு இலங்கையின் மற்றும் பாகங்கள் சிங்கப்பூர் முதலிய தொடுவாய் ராச்சியப் பகுதிகள் ஆகிய இடங்களில் வசிக்கும் தமிழ் நன்மக்களுட் பலர் ஸ்ரீமாந் சபாபதியவர்கள் செய்துவந்த இடையறுத் தேசத் தொண்டை வியந்து, அவர் மரணத்தையிட்டுப் பெரிதும் அநுதாபப்படலாயினர். தமிழ்மக்கள் மாத்திரமன்று சிங்களச் சகோதரர்களும் இவர்விஷயமாகத் தம் அநுதாபத்தைத் தெரிவித்திருக்கின்றனர். அவருடைய பிரிவால் நேர்ந்த கஷ்டங்களை யாமும் இப்பொழுது அநுபவத்திற்காண்கின்றேம். ஸ்ரீமாந் சபாபதியவர்கள் போன்ற பெரியார் பலர் நந் தமிழ்ச் சாதியாரிடத்தே மேலுந் தோன்றினாலன்றி எங்கள் அடிமைத்திறம் நீங்கப்போவதில்லையெனலாம். ஆதலால் எங்கள் சிறுவர் காலததியில் உணர்ந்து பின்பற்றித் தேசத்தொண்டர்களாய் வந்து உழைக்கவேண்டின் இப்பெரியார்போல்வாருடைய ஞாபகார்த்தமாக யாதும் சிறந்த சின்னம் அமைத்தல்வேண்டுமென இங்குள்ள அபிமானிகள் பலர் அபிப்பிராயப்படுகின்றார்கள். உத்தியோகார்த்தமாகவும் பிறகாரணங்கள் பற்றியும் வெளிநாடுகளில் வசிக்கும் நம்மவர்களும் இவ்விஷயத்தை நன்கு சிந்தித்து இதன்பொருட்டு இயன்ற திரவிய சகாயஞ் செய்வதோடு ஸ்ரீமாந் சபாபதியவர்கட்கு எவ்வகையான ஞாபகசின்னம் அமைத்தல்வேண்டுமெனபதையும் இப்பத்திரிகை அதிகாரிகட்குத் தெரிவித்தல் நன்றாகும். இதன்பொருட்டு யாதும் நிதி உதவ விரும்புவோர் இந்துசாதன மானேஜருக்கு அநுப்பலாகும். இவ்விஷயத்தை நிறைவேற்றுதற்கான ஒழுங்குகள் விரைவிற் செய்யப்படும்.

## சமாசாரம்.

புதிய சட்டநிருபண சபைத் தேர்வு:—இத் தெரிவு அடுத்த புரட்டாதிமாதம் வரையில் நடைபெறுமென அறியலானேம்.

எமது ஏசன்றநும் சுன்னகம் பொருட்காட்சியும்:—சமீபத்தில் நடைபெற்ற சுன்னகம் பொருட்காட்சியில விசேஷபொருட்களுக்காக 300 ருபாவும், தொழிலாளருக்கு 150 தராதரப்பத்திரங்களும், மணியகாரர் இருவருக்கும் முத்திரைப்பரிசுகளும் எமது ஏசன்றரவர்களாற் கொடுக்கப்பட்டன.

கந்தவன மகோற்சவம்:—இப்புராதன சுப்பிரமணிய ஆலயத்திலே இந்தவைகாசிமீ 21உ செவ்வாய்க்கிழமையாகியஈளயத்தினம்துவசாரோகணமாகி அடுத்த ஆனிமீ 3உ திங்கட்கிழமை இரதோற்சவமும், 4உ செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் மிகவுஞ் சிறப்பாக நடைபெறும்.

மோட்டர் விபத்தைத் தடுக்கும் வழி:—மோட்டர்ரதத்தினால் இலங்கையில் நிகழும் விபத்துக்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டுக்கொழும்பிலே ஓர் சபை ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

### விவாகம்.

சென்ற மேமீ 29உ வியாழக்கிழமை காலை நாலரைமணிவரையில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் மல்லாகம் அங்கிலவித்தியாசாலைத்தலைமை ஆசிரியர் ஸ்ரீ வை. செல்லப்பா அவர்களுக்கும் ஸ்ரீ சுப்பிரமணியமவர்களின் புத்திரி ஸ்ரீமதி. சின்னம்மாவுக்கும் விவாகம் வெகுசிறப்பாக நடைபெற்றது. தம்பதிகள் இஷ்டசித்திகளைப் பெற்றுப் பல்லாண்டு வாழ்வாராக.

### நூல்களைப்பற்றிய குறிப்பு.

வாலிப உலகம்.—இது மாயவரத்திலிருந்து குருவாரந்தோறும் வெளிவரும் ஒருபுதிய முஸ்லீம் பத்திரிகை. இதில் ஒற்றுமை தீண்டாமை காட்டுக்கல்வி, மதுவிலக்கு முதலிய விஷயங்கள் வரையப்பட்டுள்ளன. மிஸ்டர் கா. பொ. முகம்மது இபுராஹிம் அவர்கள் இதன் ஆசிரியராவர். இதன்வருடக்கிரயம் ருபா 5. விலாசம், 'பத்திரிகாசிரியர், "வாலிப உலகம்" மாயவரம்.

"மோகநு" அல்லது மோசம்போன தாராநாதன்.—இது கோயம்புத்தூர் ஸ்ரீ K. கிருஷ்ணசுவாமி ஐயரவர்களால் இனியதமிழ்வசனநடையில் எழுதி ஸ்ரீ சி. கு. நாராயணசாமி முதலியாரால் அச்சிட்டு வெளியிடப் பெற்ற ஒருசிறந்த நவீனகதையாகும். இதன் கண் வேசியர் சகவாசத்தால்வரும் மோசம், சொந்த மனையாளை அலட்சியஞ் செய்வதனால் ஏற்படும் பச்சாத்தாபம், பதிவிரதாதர்மம் முதலிய விஷயங்கள் கதைவாயிலாக நன்கு எடுத்து விளக்கப்பட்டிருக்கின்றன. இந்நவீனகதை பெண்பாலாராலும் படிக்கப்படத்தக்கதாம். பிரதியொன்றின்விலை அணு 6. பெற விரும்புவோர் பின்வரும் விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம். ஸ்ரீ சி. கு. நாராயணசாமி முதலியார், 126. தாமஸ் வீதி கோயம்புத்தூர்.

"தேசாபிமானி" தவிர்த்தக் கொள்ளொணுச் சந்தர்ப்பங்கள் காரணமாகச் சிலமாசங்களாக வெளிவராதொழிந்த "தேசாபிமானி" என்னும்பத்திரிகை சென்ற புதன்கிழமை தொடக்கம் பழையபடி வெளிவரலாயிற்று. இப்பத்திரிகை வாரமிருமுறை வெள்ளி செவ்வாய்க்கிழமைகளில் வெளிவரும். இப்பத்திரிகைக் கெனச் சொந்தமான ஒரு சிறந்த அச்சியந்திரசாலை யிருப்பதனாலும், திறமைவாய்ந்த பத்திரிகாசிரியர்களும் பதிப்பாசிரியரும்இதனை நடாத்தத்தலைப்பட்டிருத்தலினாலும் இனி இப்பத்திரிகை யாதும் இடையூறின்றி நமது தேச ஈடேற்றத்தின் பொருட்டு அநுகூலத்தோடு உழைத்துவருமென நினைக்கின்றேம். பத்திரிகைகளில் அநுகூலம் அவற்றை நிர்வகித்து நடத்தும் அதிகாரிகளில் மாத்திரம் முற்றாகத் தங்கியிருக்கின்றதென எண்ணவொண்ணாது. அப்பத்திரிகைகளை ஏற்று வாசித்து வரும் அபிமானிகளிலேயே பெரிதும் தங்கியிருக்கின்றது. இத் தேசாபிமானி தேச ஈடேற்றத்தின் பொருட்டு நன்கு உழைத்தல்வேண்டுமென்பதும் தமிழ் நன்மக்களாற பெரிதும் அபிமானிக்கப்படல்வேண்டுமென்பதும் எமது மனப்பூர்வமான வேணவாவாகும்.

எமக்கு அனுப்பிய புத்தகத்தையும் பத்திரிகைகளையும் நன்றியறிதலுடன் ஏற்றும்.

## கந்தர்மடம் சைவபரிபாலன சபை.

நிகழும் இரத்தாக்ஷிஞு வைகாசிமீ 19உ ஞாயிற்றுக்கிழமையாகியசென்ற இரவுஏழுமணியளவில் கந்தர்மடம் சைவப்பிரபுக்கள் யாவரும் ஒருங்குகூடித்தேவாரபாராயணத்துடன் கந்தர்மடம் கந்தபுராணமடத்தில் ஓர் சபை கூடினர். அச்சபைக்கு கந்தர்மடம் சைவபரிபாலனசபையென நாமகரணமுமிட்டனர். இச்சபையின் உத்தியோகத்தர்களாகவும் அங்கத்தவர்களாகவும் பின்னாற்குறிக்கப்படும் பிரபுக்கள் நியமனம் பெற்றனர்.

ஸ்ரீ ச. அம்பலவாணரவர்கள் சபாநாயகராகவும், நீர்வைவாசன் சிற்சபேசனவர்கள், யாழ்ப்பாணம் கச்சேரி ஸ்ரீ வி. சின்னத்தம்பி முதலியாரவர்கள், வைத்தியசாலைப்பிரதம விகிதர் ஸ்ரீ செ. மயில்வாகனமவர்களாகிய மூவரும் உபசபாநாயகர்களாகவும், ஸ்ரீ இ. செ. பொன்னம்பலமவர்கள் காரியதரிசியாகவும், ஸ்ரீ வை. சி. சி. குமாரசுவாமியவர்கள் உபகாரியதரிசியாகவும், ஸ்ரீ ஆ. ஐயாத்துரையவர்கள் தனாதிகாரியாகவும், ஸ்ரீ ஆ. கந்தையா அவர்கள் உபதனாதிகாரியாகவும், ஸ்ரீ சி. அம்பலவாணர், ஸ்ரீ க. கார்த்திகேசு, ஸ்ரீ செ. கனகசபாபதி, ஸ்ரீ சீ. நாகலிங்கம், ஸ்ரீ சி. தியாகராசா, ஸ்ரீ ந. வைத்தியலிங்கம், ஸ்ரீ வி. சின்னையா, ஸ்ரீ கீ. ஆறுமுகம், ஸ்ரீ வே. கனகசபை, ஸ்ரீ நா. சுப்பிரமணியம், ஸ்ரீ வி. கதிரவேலு, ஸ்ரீ க. முருகேசு என்னும் பன்னிருவரும் நிருவாகசபை அங்கத்தவர்களாகவும் நியமனம் பெற்றனர். சனங்கள் கரகோஷத்தால் தத்தம் முழுவிருப்பத்தையும் காட்டினர். கூட்டம் தேவார பாராயணத்துடன் ஒன்பதரைமணிவரையில் சமாப்தியாயிற்று. அடுத்த ஞாயிற்றுக்கிழமை நீர்வைவாசன் சிற்சபேசன் அவர்களால் உருத்திராக்கம் என்பதை பீடிகையாகக் கொண்டு ஓர் சிறந்த பிரசங்கம் செய்யப்படும்.

—கடித.

## ஸ்ரீ ஜ்ஞானசம்பந்த சுவாமி குருபூஜை மஹோபந்நியாசம்.

நிகழும் ரத்தாட்சிஞு வைகாசிமீ 8உ புதவாரம் மூலநக்ஷத்திரம் ஸ்ரீ ஜ்ஞானசம்பந்த பரமாசார்யஸ்வாமிகள் ஆச்சாபுரம் என்னும் திருநல்லூர்ப் பெருமணத்தில் தம்மால் முத்தி பெறுபவர்களாய்ப் பூமியில் வந்தவதரித்துத் தமது திருமணத்தைக் கொண்டாடவும் தரிசிக்கவும் வந்த ஞாதிகள் சம்பந்திகளாகிய கிளைகளோடும் பக்த சனங்களோடும் பதினாயிரம் திருக்கூட்டத்தோடும் காதலியாரைக் கைப்பிடித்தபடி சிவஜோதியிற்கலந்து எல்லாரும் சிவமணம் கைக்கொள்ளவைத்த அபாரகாருணிகராஜமங்களகுருபூஜைத்தினமாதலால் அனறு பகல் ஸ்ரீமதா அறுமுகநாவலஸ்தானத்தின்மேல் சாரதாய்க் கீழைவீதிக்கு நேரேதென்பாலுள்ள உமாபதிவீதியில் உமாபதி விலாசத்தில் குருபூஜையும் அன்றிரவு சித்ஸபையில் இரண்டாங் கால சேவையில் பரமாசார்யஸ்வாமிகள் ஸ்ரீமந். நிர்த்தாநந்த சிவஜோதியில் ஐக்யமறாராதனமானவுடன் 9 மணிக்குமேல் ஸ்ரீமத். அம்பலவநாவலஸ்வாமிகளால் "ஆசாரியப்பிரபாவ" உபந்நியாஸமும் ஆறுமுகநாவலஸ்தான சாஸ்திரபரிசோதகர் பிர்ம்மஸ்ரீ ஸ்ரீராமசாஸ்திரியவர்களால் அதற்கநுகுணமாக "சிவஞானசித்தி" உபந்நியாசமும், முன்னும் பின்னும் இடையிலும் பழனியப்ப முதலியார் தேவாரபாடசாலை உபாத்தியாயர் ஸ்ரீ இராமலிங்க ஓதுவாரவர்களால் தமிழ் வேத மந்ரபாராயணமும், வாத்தியகோஷத்துடன் குருபாதசேவையும் பக்த ஜனங்களது கண்ணுக்கும் செவிக்கும் விருந்தாய் நிகழ்ந்தன.

ஸ்ரீ ஞானசம்பந்த பரமாசார்யப்புராணத்தில்

"எச்சின்மயங்கிட வுனக்கிதிட்டாரைக்காட்டென்று,
கைச்சிறிய தொருமாறு கொண்டோச் சக்காலெடுத்தே,
அச்சிறிய பெருந்தகை யாராணர்த்தக்கண்டினிபெய்,
துச்சியின் மேலெடுத்தருளு மொருதிருக்கைவிரற் சுட்டி"

என்னும் மந்திரத்தை மூலமாகக் கொண்டு நிகழ்ந்தது உபந்நியாஸம் என்பது, —கடித.

## மகோற்சவமும் உபந்நியாசமும்.

அராலியம்பதி முருகமூர்த்தி கோயிலிலே நடைபெற்றமகோற்சவகாலத்துஐந்தாந்திருநாளாகிய சித்திரைமீ 30உ திங்கட்கிழமை இரவு 7 மணியளவிலே, ஷை ஆலயத்தச் சந்நிதானத்தில் பன்னூற்றுக்கணக்கான சனங்கள் குழுமிய சமூகத்திலே, மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியருள் ஒருவராகிய ஸ்ரீ குமாரசூரியரவர்களது நன்முயற்சியினாலே அன்றைய உபயகர்த்தர் ஸ்ரீ சரவணமுத்துப்பிள்ளையவர்கள் விரும்பியவண்ணம் தஞ்சாவூரை ஜெனனஸ்தானமாகவுடையவரும் இப்பொழுது பரமேஸ்வரக் கல்லூரி ஆசிரியருள் ஒருவருமாய் விளங்கும் ஸ்ரீ எஸ். நடேசபிள்ளை அவர்கள் பீ. ஏ. பீ. எல்., ஷைகல்லூரி ஆசிரியர் சிரேட்டர் ஸ்ரீ எஸ். சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் பீ. ஏ., இராமநாதன் கல்லூரி ஆசிரியர் தலைவர் ஸ்ரீ சுவாமிநாதன் பீ. ஏ. அவர்கள், ஷை கல்லூரியிற் சங்கீதாசிரியரும் தமிழ்ப் பண்டிதருமாகிய ஸ்ரீ திரு சோமசுந்தரம்பிள்ளை யவர்கள் என்னுமிவர்களாலே சைவசமய உபந்நியாசங்கள் நடைபெற்றன.

அப்பொழுது உற்சவாசாரியராய் அங்கிருந்த திருநெல்வேலிச் சிவன்கோயில் பிரமஸ்ரீ. சபாபதிக்குருக்களவர்கள் சபாபதித்துவம் வகிக்க ஸ்ரீ நடேசபிள்ளையவர்கள் 'கந்தரநுபூதி' என்னும் விஷயமாகக் கேட்பவர் ஒவ்வொருவர் மனதிலும் சுப்பிரமணியபத்தி நன்கு சித்திக்குமாறு சுருங்கச்சொல்லல் முதலிய வனப்பமையும்படி சொல்லினர். பின்பு ஸ்ரீ சிவபாதசுந்தரம்பிள்ளையவர்கள் ஷை விஷயத்தை ஆதரித்துக் குறிப்புரை கூறியதோடு, ஆலயங்களிலே சைவச் சிறவர்கள் பெருமை சிறமை பாராட்டாது தீவர்த்தி பிடித்தல் முதலிய திருத்தொண்டுகள்செய்து பழகல்வேண்டுமென்றும் நன்கு உபதேசித்தனர். அதன் பின்பு ஸ்ரீ சுவாமிநாதனவர்கள் பாண்டிமாதேவியார் சைவம் வளர்த்தமைபோலச் சைவப் பெண்கள் யாவரும் சைவசமய வளர்ச்சியின் பொருட்டு உழைக்கவேண்டுமென்று வற்புறுத்தினர். அதன்பின்பு ஸ்ரீ சோமசுந்தரம்பிள்ளையவர்கள் ஒரு தேவாரத் திருப்பாசுரத்தைப் பாடி அதனையே பீடிகையாகக் கொண்டு விபூதி ருத்திராக்ஷ முதலிய சிவசின்னந் தரித்தலின் அவசியத்தை விளக்கியும், இடைக்கிடை சமயோசித பாடல்களை இன்னிசையோடு பாடியும் எவரும் உற்சாகத்தோடு கேட்கும்படி மிக்க சாதுரியமாகப் பேசினர். பின்னர்ச் சபாநாயகர் முடிப்புரைகூறிச் சபையோர்களையும் உபந்நியாசகர்களையும் உபயகர்த்தரையும் ஆசீர்வதிக்க தேவாரபாராயணத்தோடு உபந்நியாசம் பூர்த்தியாயிற்று.

ஆலயங்கள்தோறும் கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த பெரியோர்களைக்கொண்டு சமய போதஞ் செய்வித்தலும், தாசியர் நடனம், வாண வேடிக்கை முதலிய செயல்களைத் தடுப்பதும் ஆலயகர்த்தர்கட்கும், உபயக்காரர்கட்கும் புண்ணியச் செயல்களாகும். —கடித.

## கடிதம்.

இந்துசாதனப்பத்திரிகாசிரியரவர்கட்கு:

ஐயா,

தங்கள் இந்துசாதனம் 88-ம் இலக்கப் பத்திரிகையில் (உடுவில்) பிரமஸ்ரீ நா. சங்கரசுப்பையரவர்கள் இப்பொழுது சுவாமி சச்சிதானந்த ராஜயோகிகள் என்ற நாமத்துடன் கொழும்பில் வந்து அங்கு கதாப்பிரசங்கஞ்செய்து வருகிறார்களென்று வெளிப்படுத்தியிருந்ததைப் பார்த்துப் பேரானந்தமுற்றலானேம் சென்ற பலவாண்டுகளாகச் சுவாமிகளின் திருமுக தெரிசனையைக்காணாது சமையாசமையங்களில் மாத்திரம் நினைந்து வருந்தியிருந்த எம்மனோர்க்குத் தாங்கள் வெளிப்படுத்திய செய்தி புத்துயிரை ஆக்கியதுபோலாம். சுவாமிகள் மட்டக்களப்புப் பகுதிக்குப் பலமுறை முன் விஜயஞ் செய்திருப்பதாலும் அவர்கள்மாட்டுப் பத்திபூண்டொழுகும்அடியாரநேகர் இவ்விடத்திலுமிருத்தல்பற்றியும் இன்னுமோர் முறை இப்பகுதிக்கு விஜயஞ்செய்து மீள மறக்கமாட்டார்கள். சுவாமிகளின் வருகை இப்பகுதியார்க்கு ஓர் திருநாளாகுமென்றும், அவர்களின் திருமுக தெரிசனைசெய்ய அநேக அன்பர்கள் ஆசைப்பட்டுக்கொண்டிருக்கிறார்களென்றும் மிகுந்த வியத்துடன் தங்கள் பத்திரிகை மூலந் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். திருக்கதிர்மாகத் தீர்த்தோற்சவம் இன்னுஞ் சில நாட்களுள் நிகழவிருப்பதால் சுவாமிகள் இம்மார்க்கமாக வருவார்களென்று எதிர்பார்த்திருக்கும்,

சுவாமிகளின் அடிமை.

செங்கலடி,
இரத்தாட்சிஸ்,
வைகாசிமீ 14உ.

## "இவ்விஷயத்திலதிக சிரத்தை எடுத்துழைக்கிறார்களா?"

சென்ற பங்குனிமீ 6உ வெளிவந்த "தனவைசிய ஊழியன்" என்னும்பத்திரிகையில் ஓர் 'வித்து' சீர்கொழும்பிற் தைப்பூசத்தன்று நகரத்தார்களால் நடத்தப்பெற்ற வேலுற்சவத்திற் சுவாமியை அவர்கள் விருப்பிய வீதியாற் கொண்டு செல்லமுன் அநுமதியளித்துப் பின்னவ்வநுமதியை யழித்த பொலிஸ் அதிபதியுடைய செயலாற் பெருங்களியடைந்திருக்கும் கத்தோலிக்கருடைய அக்கிரமங்களை விக்கிரகஞ் செய்தற்குக் கொழும்பு விவேகாநந்தசபையாரும் இன்னும் வேறு பலரும் வேண்டிய முயற்சி செய்வாராய் 'இவ்விஷயத்திலதிகசிரத்தையெடுத்துழைக்கிறார்கள்' என்று கூறினார். சிறிது சிரத்தையெடுப்பவரையே காணமுடியாதிருக்கவும், அதிகசிரத்தை யெடுக்கிறாரெனக் குறிப்பிடப்பட்ட இவர்கள் உழைப்பின் பெறுபேறென்ன? சமயத்தைப் பெரிதெனப் பேணிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் போல்வாரொருவர் எம்மிடையிருக்கப்பெறாத துரதிஷ்டத்தால் எங்கள் சமயத்தை யனுட்டிப்பவர்களுக்குப் புறச்சமயத்தவர்களோடொத்த சுயாதீனங்கள் கிடைக்கப்பெறாதிருக்கவும் அபிமானமுறாது 'ஏகம்சத்' என்று சொல்லும் பரம ஞானிகளைப்போல் எல்லாரும் மௌனஞ் சாதிக்கிறார்களென்று நாமிருக்க 'அதிக சிரத்தையெடுக்கிறார்கள்' என்ற புகழ் சிலர் மேலேற்றப்படுகிறது. இவர்களுழைப்பின்முடிவென்ன? உழைக்கச் சிரத்தையெடுப்பவர்கள் நன்குழையாதொழிவர்களாகில்இவர்கள் உழைப்பால்கட்டமே யன்றி நயம்வருதலரிது. சபையென்றபெயர்மாத்திரையான் அபிமான முள்ளவர்களையுடையதுஅஃதெனவனுமானிக்கவிடமில்லை.யாருமபிமானமுடையாரொருவராவது ஊக்கப்படுத்தினால் தான் சபையும் கிளர்ந்து முயற்சி செய்யும், தாங்களே கிளர்ந்துவேலைசெய்யக் கூடிய எங்கள் சட்டநிருபணசபையங்கத்தவர்களெங்கே? இனி யேற்படுத்தப்படப்போகிற புதிய சபைக்குள் நுழைய விரும்புபவர்களை யாவது ஏன் இன்னும் இவ்விஷயத்தில் முயற்சி செய்யவில்லையென்றுகேட்டால் 'வோற்' றுக்கஞ்சியாவது சிறிது முயற்சி செய்வார்களே. நகரத்தார்கள் 'வோற்' சம்மதம் கொடுக்குமுன்னமே யிவர்களைக்கொண்டாவது சிறிதுழைப்பித்தல் புத்தியல்லவா? வருகிற திருவிழா அவ்வீதியால் நடத்திச் செல்ல உரித்துப்பெறமுடியுமெனச் சிலர் ஆகாயக்கோட்டை கட்டுகிறார்கள். ஒருசமயம் அவ்வாறு நடத்துதல் கூடுமாயினும் அதைப்பற்றி யிப்போதிவர்கள் எவ்வாறுறுதியாகச் சொல்லலாம்? ஒருமுறை சட்டநிருபணசபையங்கத்தவராகத் தெரிவுசெய்யப்பட்டுவிட்டால் பின் அவருக்கு இவ்விஷயத்திலதிகம் சிரத்தை யிருந்தாலு மிருக்கலா மில்லாவிட்டாலும் விடலாம். இனிமேலாவது உழைப்புகளின் முடிவை நாமறியக் கூடாதா? —கடித.

## பரிகரித்தற்கரிய நஷ்டம்.

ஸ்ரீமான் அ. சபாபதியவர்களைப்பற்றி "தேசாபிமானி" (28-5-24) கூறுவது:—

"சென்ற நாற்பது வருட காலங்களாகத் தமது தாய்நாட்டிற்கு உண்மைத் தொண்டு செய்துவந்த திருவாளர் அருணசலம் சபாபதி அவர்களின் மரணத்தால் யாழ்ப்பாண நாடு அடைந்திருக்கும் நஷ்டம் அளவிடக்கூடியதன்று. இம்மகான் சுயநலங் கருதாது தாய்நாட்டின் முன்னேற்றமொன்றைமட்டும் கருதி உழைத்துவந்தசிலசிறுதொகையினரில்முதலானவராயிருந்துவந்தார். சென்றமுப்பதுவருடங்களாக அவரொத்துழையாத தேசிய இயக்கம் யாழ்ப்பாணத்தி லொன்றுமே நடைபெறவில்லையென்று மிகவுமுறுதியாகக் கூறலாம். இவ்விதமகத்தான தேசகைங்கரியங்களில் ஈடுபட்டிருப்பவர்களும் மானிடப்பிறவியாதலால் அவர்களும் சிற்சிலசமையங்களில் பிழைத்திருக்கலாம். தவறுகள் செய்திருக்கலாம். அங்ஙனமே சபாபதி யவர்களும் பிழைகளும் தவறுகளும் செய்திருக்கலாம். ஆயினும் அவர்கள் தனது மனச்சாட்சி சரியென்று ஒப்புக்கொண்டவைகளை மட்டுமே செய்துவந்தார்களென்பதை நாம் நன்கறிவோம். ஆதலால் அவை குற்றமாகா. திருவாளர் சபாபதி அவர்களின் அபிப்பிராயங்களுடன் நாமே அநேகமுறை ஒத்திராதிருந்து அவ்வபிப்பிராயங்களைக் கண்டித்திருக்கின்றோம். ஆயினும் அவர்களின் ஆழ்ந்த தேசாபிமானத்திற்கும் அவர்களின்உத்தமகுணத்திற்கும் நாம்எப்பொழுதும்மரியாதையாகவே இருந்துவந்திருக்கின்றோம். இம்மகானின் மரணத்தால்இலங்கைப் பொதுஜனசமூகத்தில் ஓர் பெரும் பிளவு ஏற்பட்டுவிட்டது. இப்பிளவு சமீபத்தில் நிரம்பக்கூடியதன்று. ஒருபோதும் திருப்திகரமாய் நிரப்பக்கூடியதன்று. இம்மகானின் பிரிவால் துன்புறும் மனைவி மக்களுடனே யாம் அநுதபிக்கின்றோம்."

## யாழ்ப்பாணம் மட்டுவில்தெற்கு சரஸ்வதி வித்தியாசாலை.

ஷை வித்தியாசாலைத் தருமவிஷயத்திற்காக அவ்வூர் காரியதரிசி த. இராமநாதன் அவர்கள் முயற்சியால், பொருள் உபகரித்த தருமசீலர்களின் பெயர்களும், ஊர் விலாசமும், பொருட்தொகையும் கீழ்வருமாறு காண்க.

இங்ஙனம்,
T. Ramanathan.

| நி. | பெயர். | ஊர், விலாசம். | ரூ. ச. |
|---|---|---|---|
| 1 | T இராமநாதன் | மட்டுவில் தெற்கு | 70-00 |
| 2 | S N K S நாராயணரெட்டியார் | மூலைக்கரப்பிட்டி | 2-00 |
| 3 | கி. சுப்பாரெட்டியார் | ,, | 2-00 |
| 4 | சு. இராமசாமிரெட்டியார் | ,, | 2-00 |
| 5 | வீரம்மாள் | கொழும்பு | 2-00 |
| 6 | நா. சு. இராமசாமி | நக்குளம் | 1-00 |
| 7 | வை. கணபதிப்பிள்ளை | கொழும்பு | 1-00 |
| 8 | பூ. அலோய் ஞானப்பிரகாசம் | ,, | 1-00 |
| 9 | க. சுப்பிரமணியம் | ,, | 2-00 |
| 10 | J செல்லையாபிள்ளை | ,, | 2-00 |
| 11 | இ. முத்தையா | ,, | 2-00 |
| 12 | மு. இ. கனகரத்தினம் | ,, | 2-50 |
| 13 | தி. அளகாகிரிசெட்டி | ,, | 1-00 |
| 14 | R S சின்னையா | தொமோதர | 5-00 |
| 15 | அ. அம்பலவாணர் | வதுளை | 5-00 |
| 16 | அ. க. ச. மு. சங்கரப்பிள்ளை | ,, | 2-50 |
| 17 | வெ. ரா. இராமநாதன் & கோ | ,, | 3-00 |
| 18 | க. தம்பிமுத்து | ,, | 1-50 |
| 19 | A ஆறுமுகம் | ,, | 2-00 |
| 20 | G இராசையா | ,, | 2-00 |
| 21 | T சதாசிவம் | ,, | 2-00 |
| 22 | T செல்லையா | தொமோதர | 3-00 |
| 23 | S A கனகரத்தினம் | கவறவலை | 3-00 |
| 24 | P R டானியல் சில்வா | அற்றம்பிற்றியா | 1 50 |
| 25 | க. தம்பையா | தெமோதர | 1-00 |
| 26 | P H கரோலிஸ் சில்வா | ,, | 1-00 |
| 27 | J S இராமலிங்கம் | ,, | 3-00 |
| 28 | C இராசையா | நாவலப்பிட்டி | 1-00 |
| 29 | சி. கு. சண்முகம் | வதுளை | 1-00 |
| 30 | அரு. அரு. சோம. | கொழும்பு | 2-00 |
| 31 | பழ. செ. | ,, | 2-00 |
| 32 | J வேலாயுதபிள்ளை | ,, | 1 00 |
| 33 | K M S அகம்மதுமீராசாயு & கோ | ,, | 1-00 |
| 34 | மு. ம. மொகம்மது மொய்தீன் | வதுளை | 1-00 |
| 35 | M D P பூன்சிஞ்சோ அப்புகாமி | கிறத்தோட்டை | 50 |
| 36 | D H அபயசேகர | தெமோதர | 2-50 |
| 37 | P B தென்னகோன் | ,, | 50 |
| 38 | S T முத்துக்குமாரசாமி | ,, | 1-00 |
| 39 | A M அப்துல் ஹைமன் | ,, | 1-00 |
| 40 | ஆ. சுந்தையா | பசறை | 1-00 |
| 41 | G D A ஜெட்றிக்கோ | கர[illegible]லை | 1-50 |
| 42 | A H மிஸ்கின் & கோ | வ[illegible]ளை | 1-00 |
| 43 | H M அபயகோன் | தெ[illegible]மாதர | 50 |
| 44 | E A ஜாவிஸ் அப்புகாமி | நாவலை | 1-00 |
| 45 | அ. பக்கீர் அகமெட் | வதுளை | 50 |
| 46 | க. பொன்னையா | ,, | 1-00 |
| 47 | மு. நாகலிங்கம் | ,, | 50 |
| 48 | S O M M சாவல் அமீது | ,, | 1-00 |
| 49 | V சுப்பிரமணியம் | நாவலப்பிட்டி | 1-00 |
| | | ஆக ரூபா | 149-50 |

(Mis. 492)

## பிரசங்கம் புரிதல்.

உலகத்திலுள்ள மக்களைத் திருத்துதற்குப் பிரசங்கம் புரிதல் ஒரு சிறந்தவழியாயிருக்கின்றது. இதனை நமது முன்னோர் நன்குணர்ந்திருந்தனர். முன்னாளில் புராணப்பிரசங்கம் இல்லாத ஊர் கிடையாது. பெரியபுராணம் திருவிளையாடற் புராணம் கந்தபுராணம் விநாயகபுராணம் இராமாயணம் முதலியன முக்கியமானவைகளாகும். இதுகாலை ஆங்காங்கு கிராமங்களில் புராணப்பிரசங்கங்கள் நடைபெறுகின்றன. ஆனால் நன்கு உட்கருத்தறிந்து உண்மையோடு புராணப்பிரசங்கம் புரிபவர் குறைவாகவே யிருக்கின்றனர். அதிலும் பக்தி செலுத்தி உள்ளன்போடு கேட்போர் தொகையும் மிகக்குறைந்திருக்கின்றது.

மண்டபங்களில் மேசைகளின் முன்னின்று பிரசங்கம் புரியும் முறையானது பலமடைந்து வருகின்றது. இப்படிச் செய்யப்படும் பிரசங்கங்களாலும் பெருநலனை உண்டாக்கலாம். பெரியோர்கள் அருளியிருக்கும் மேற்கோள்களோடு இனிமையான நடையில் அரியவிஷயங்களை நன்கு விளங்குமாறு உள்ளுணர்ச்சியோடு எடுத்துச் சொன்னால், எப்படிப்பட்ட மனிதரையும் நல்வழிப்படுத்திவிடப் பிரசங்கமுறை உதவிபுரிகின்றது. பிரசங்கம் புரிபவர் கேட்கிற மக்களோடு இரண்டறக் கலந்துநின்று பேசக் கற்றுலொழியப் பிரசங்கத்தில் பெருநலன் விளையாது.

இதுகாலை பிரசங்கம் புரியும் அன்பர்கள் சில விஷயங்களை நன்கு கவனித்தல்வேண்டும். உபந்நியாசமேடைக்கு வந்துவிட்டால் முக்கியமான விஷயங்களைக்கூடக் கவனிக்கிறார்களில்லை. சில பிரசங்கிகள் எழுந்து அவையடக்கஞ் சொல்வதில் காலத்தைக் கழித்துவிடுகின்றனர். ஒருவர் "நான் படிப்பில்லாதவன்; எனக்கு ஒன்றுமே கூடத் தெரியாது; அக்கிராசனாதிபதி பேசும்படி ஆக்ஞாபித்துவிட்டார்; விஷயமோ மிகப் பெரிது; அதன் கால்கூட எனக்குத் தெரியாது; இங்கு கூடியிருக்கிற மகாகல்விமான்களாகிய உங்களைப் பார்க்கும் போது என்உடலெல்லாம் நடுங்குகிறது; நான் கூறுகிறயாவும் பிழையமாகவே யிருக்கும்; இருந்தாலும் அன்னபக்ஷிமாதிரி............" ஆரம்பித்துத் தமக்குக் கொடுத்த நேரத்தை அவையடக்கத்தில் தீர்த்துவிட்டு அக்கிராசனரை யாசகங் கேட்கிறார். இது அநாவசியகமாகும். நிகழ்ச்சி முறையில் விஷயமும் பெயரும் அச்சிட்டு இரண்டு வாரங்களான பிறகு 'அக்கிராசனர் ஆஞ்ஞாபித்தபடி பேசுகிறேன்' என்பதற்கு அர்த்தமே கிடையாது. தமக்கு ஏதோ தெரியுமென்றுதான் உபந்நியாசகர் மேடைக்கு வந்திருக்கிறார்; வந்தபிறகு எனக்கு ஒன்றும் தெரியாது என்று கூறுவது புத்தியுள்ள பேச்சாகாது. தவிர அரை மணிநேரம் பேசவேண்டுமானால் இருபது நிமிஷங்கள் வரை அவையடக்கங் கூறுவது வீண்வேலையேயாகும்.

சில பிரசங்கிகள் தமக்கு நேசங்கொள்ள விருப்பமுடையவரைப் புகழ்வதுதான் உபந்நியாசமென்று கருதிவிடுகின்றனர். எழுந்தது முதல் உட்காருகிறவரையில் புகழ்ந்துகொண்டேயிருக்கின்றனர். தாங்கள் எடுத்துக்கொண்ட விஷயத்தையும் விட்டுவிட்டுச் சபை நடத்துவோரையும் எதிரிலுள்ள சிலரையும் சந்தர்ப்பமில்லாமற் புகழ்ந்துகொண்டிருக்கின்றனர். இன்னுஞ் சிலர் தங்களையே புகழ்ந்து கொள்ளுகின்றனர். தங்களுடைய புத்தகங்களையும் தங்களுடைய உபந்நியாசங்களையும் தங்களுடைய பெருமைகளையும் பிறவற்றையும் பற்றிக்கூறி அவ்வளவிலேயே பிரசங்கத்தை முடித்துவிடுகின்றனர்.

இன்னுஞ் சிலர் தாங்கள் பேசுமிடம் எப்படிப்பட்டது? ஜனங்கள் எப்படிப்பட்டவர்கள்? சபையின் நோக்கமெது? என்ற விஷயங்களை அணுவளவுங் கருதாமல் சபை நடத்துவோரையும் கூடியிருக்கின்ற சனங்களையும் வெறுப்புக்குஆளாகும்படி செய்துவிடுகின்றனர். கூடியிருக்கிற கூட்டத்தின் நோக்கத்தை யறிந்து அந்த வழியில் பயன்படத்தக்க விஷயங்களை யெளிதாக—இனிமையாக—எடுத்தோத முன் வராமல் மனம்போனபடி பேசுவது முறையன்று.

வேறுசிலர் குறித்த நேரத்தில் முடிக்கிறதேயில்லை. தான் கூறுவதை யாருங்கேட்கவில்லையென்று தெரிந்தால் அதற்காக அவர்களைத் திட்ட முயலுகிறார்களேயன்றித் தம்முடைய மூட்டையைக் கட்டமுயலுகிறார்களில்லை. தாம் பேசும் பேச்சை ஜனங்கள் கவனிக்காவிட்டால் அதற்காகத் திட்டுகிறவர் பிரசங்கமேடைக்கு வருதல் பெருமூடத்தனமாகும். தன்னுடைய பேச்சில் ஜனங்கட்கு விருப்பமில்லை என்று தெரிந்தால்—ஜனங்கள் அசிரத்தைகாட்டினால்—பிறகு பிரசங்கி அங்குநிற்கக்கூடாது. இந்த விஷயம் பலருக்கு விளங்கவில்லை. சில வழவழத்தவர்கள்சனங்கள் எழுந்துபோனாலும் அக்கிராசனாதிபதியானவர் நிறுத்தும்படி பலமுறை சீட்டுக் கொடுத்தாலும் தனக்குக் கொடுத்த கால அளவுக்குமேல் எவ்வளவு நேரம் போயிருந்தாலும் பேசிக்கொண்டேயிருக்கின்றனர். கடைசியில் கையைப் பற்றி இழுத்து உட்காரவைக்கிற வரையில் பேசிவிட்டுத் திருப்திப்படாமல் முயங்குபவருமுண்டு. இம்

மாதிரி ஆட்களைப்பிரசங்கமேடைகளிலெழுந்து நிற்கவிடக்கூடாது. இதனால் சபையிலிருக்கிற ஜனங்களின் மனமரணது சசப்பை யடைந்து விடுகிறது.

பெண்மக்களும் ஆண்மக்களுமாகக் கூடியிருக்கிற கூட்டங்களில் பேசுவோர் கவனமாகப் பேசவேண்டும். சில பிரசங்கிகள் இந்தவேற்றுமையை உணர்வதே கிடையாது. பொதுவாகப் பெண்மக்கள் கூடியிருக்கிற கூட்டங்களில் பேச எழுந்திருப்போர் சாதுரியமாகவும் கௌரவமாகவும் பேசக் கற்றிருக்கவேண்டும். சாதுரியமாகப் பேசுவது கஷ்டமாக இருக்குமானால், கௌரவமாகவாவது பேசவேண்டும். சிலர் மனம்போனபடி ஆபாசமாகப் பேசித் தீர்த்துவிடுகின்றார். இந்த இடம் பெரிதும் கவனிக்கத்தக்கதாகும்.

மற்றுஞ்சிலபுலவர்கள் தாங்கள் கற்றவித்தையைக் காட்ட முன்வந்துவிடுகின்றனர். சாதாரணசனங்கள் கூடியிருக்கிறசபைகளில் அவர்களுடைய வாக்குக்கும் மனதிற்கும்எட்டாத பெரிய விஷயங்களை யெடுத்துக்கொண்டுதர்க்கிக்க ஆரம்பித்துவிடுகின்றனர். அல்லது ஆராய்ச்சிகளிற் புகுந்து பிரயோக நுட்பங்களையும் கல்வெட்டு சாசனங்களையும் கிளப்பிக் கஷ்டப்படுகின்றனர். அவர்களுடைய படிப்பும் ஆராய்ச்சியும் மிகக் கஷ்டமானவையேயாகும். என்றலும், அவற்றைக் கேட்போர் படுங் கஷ்டம் சொல்லுந்தரத்ததன்று. திருகி முறுகிக் கொண்டு உட்கார்ந்திருப்பவர் பெருங் கஷ்டப்படுகின்றனர். பெரிய வித்வான்கள்—ஆராய்ச்சியாளர்கள்—கூடியிருக்கிற இடங்களில் அத்தகைய பிரசங்கள் பயனளித்தல்கூடும். சாதாரண சனங்கள கூடியிருக்கிற கூட்டங்களில் இவைகளை அவிழ்ப்பது அறுபவக்குறைவையே காட்டும். சில அன்பர்கள சபையில் ஆயிரம் பேர் கூடியிருப்தாலும் எதிரேயிருக்கிற இரண்டொருவரைத் திருப்திப்படுத்துவதற்காகப் பெரும்பாடுபடுகின்றனர். அதற்காகப் பல விஷயங்களைப் பேசுகின்றனர். ஒரு பெருங் கூட்டத்திலே அப்படிச் செய்வது ஒரு உயர்ந்த பிரசங்கிக்கு அடாச் செயலேயாகும். சிலர் சாதாரண சனங்கட்கு விளங்காதபடி கடினமான நடையில் பேச விரும்புகின்றனர். இப்படிச் செய்வதால் தனக்குத்தானே இன்பமனுபவித்துக்கொள்ளமுடிகிறதேயன்றிப் பிறருக்கநுபவப்படுத்த முடிகிறதில்லை. குமரன்.

---

## விளம்பரம்.

மதவாச்சி றெயில்வேஸ்டேஷனைச் சேர்ந்த செட்டிகுளத்தில் 48 ஏக்கர் நிலம் வயலும்காடுமாகவிற்பனவுக்கிருக்கின்றது. அதற்கு தேவையான நேரம் குளத்திலிருந்து நீர்ப்பாச்சப்படுகிறது. வேளாண்மைக்கு நல்லபூமி, வேண்டியவர்கள் எமது விலாசத்திற்கு எழுதவும்.

இப்படிக்கு,
Mrs Mohideen,
Ward street,
(Mis. 491.) Badulla.

---

## ஞானோதய வாசிகசாலை.

இது யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை மூத்தநயினார்கோயில் வடக்கு வீதியில் ச. பஞ்சாட்சரக்குருக்களாகிய என்னுடைய கிருகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதில் 1000 ரூபா வரையிற் பெறுமதியான சைவ, வைஷ்ணவமதங்களுக்குரிய புத்தகங்கள். எவரும், எளிதில் வாசிக்கக் கூடிய ஏற்பாட்டுடன் வைக்கப்பட்டிருக்கின்றன. இதை விருத்தி செய்தற்குத் தமிழகத்தார் யாவரும் தக்க பொருளுபகரிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ச. பஞ்சாட்சரக்குருக்கள்.
(Mis. 490.) ஆனைக்கோட்டை,

---

## வி ள ம் ப ர ம்.

எனது மகள் சின்னம்மா விவாகஞ்செய்து பிள்ளைகளில்லாதபடியாலும் இப்போ கொஞ்சக்காலமாய் குணபேதமிடைக்கிடை வருகிறபடியாலும் அந்தநேரங்களில் புருஷன் சிதம்பரநாதர் சின்னத்தம்பி மூன் கொள் விலைக்காணியை அவளை அனுப்பி விற்று விட்டபடியாலும் இப்போ சீதனக்காணியையும் தன் பேருக் கெழுதிவிக்க ஆயித்தப்படுத்துகிறபடியாலும் எந்த நொத்தாரிசுவாவது ஒரு சாதனமும் பிறப்பிக்கப்படாதென்பதைத் தெரிவிக்கிறேன்.

ஆறுமுகம் சின்னத்தம்பி,
(Mis. 483.) கைதடி, நாவற்குழி.

---

## ரூபா 10 இனும்.

யாழ்ப்பாணம் மயிலிட்டி தெற்கிலிருக்கும் குரும்பசட்டி சைவவித்தியாசாலையில் 4-ம் வகுப்பிற் கல்விகற்றுவந்த எனது மகன் கந்தவனம் எனனும் பிள்ளை 1924ஆ மேமீ 13உ பள்ளிக்கூடத்திற்குப்போய்த் திரும்பி வரவில்லை. அந்தநாள் முதலாய் எங்குந்தேடிப் பார்த்து அகப்படாதபடியால் அவனைப்பற்றிய விபரம் அல்லது பிள்ளையைக் கண்டுபிடித்து என்னிடம் அல்லது அரசாட்சியாரிடம் ஒப்புவிப்பவர்களுக்கு ரூபா 10 இனும் கொடுப்பேன். பிள்ளையின் அடையாளங்கள்: வயது 12, உயரம் 3½ அடி இருக்கும், நிறம் பொது நிறச் சிவலை, இடதுகாதில் ஓட்டை இருக்கிறது.

28-5-24. ட. சரவணமுத்து,
(Mis. 484.) மயிலிட்டி-தெற்கு.

---

## அஷ்டபந்தன மருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட சுவாமிக்குச் சாத்தும் அஷ்டபந்தனமருநது எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

ச. வைத்தியநாதக்குருக்கள்
சிவன்கோ[illegible],
(H. 21) வண்ணார்ப[illegible]ணை.

---

## தேக்க மரம்.

றங்கூனிலுள்ள பேர்போன அங்கில கொம்பனியாரிடமிருந்து புதிதாக வருவிக்கப்பெற்றதிறமான தேக்கமரங்கள். நீளம் 6 அடி தொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்கிருக்கின்றன, விலைவிபரத்திற்கு எமக்கெழுதவும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானறு.

தந்திவிலாசம்:—
றாபி. வல்லுவெட்டித்துறை.
(H. 29.)

---

## விளம்பரம்.

| | | ரூ. ச. |
|---|---|---|
| எக்சர்சைஸ் கொப்பிகள் | குறேஸ் விலை | 16-50 |
| | டசின் ,, | 1-50 |
| | தனிக்கொப்பி ,, | 13 |

இன்னும் கல்லூரிகள் தமிழ்ப்பாடசாலைகளுக்குத் தேவையான புத்தகங்கள் மற்றுங்கொப்பிகள் இவ்விடம் மலிவாகக் கிடைக்கும்.

## பிரேதப் பெட்டிகள்.

தேக்கம்பெட்டி, முதிரைப்பெட்டி, பலாப்பெட்டி, மற்றும் சாதாரண பெட்டிகள் சோடினை தைத்தும் தையாமலும் விற்பனைக்கிருக்கின்றன.

ம. வஸ்தியாம்பிள்ளை,
(M. 34).) கச்சேரித்தெரு, யாழ்ப்பாணம்.

---

## திறமானமங்களூர்ஓடுகள்

மெஸ்சேர்ஸ் மோர்கன் அன்கோ அல்வாரிஸ் அன்கோ திறமோடுகளும் அரையோடுகள், முகட்[illegible]டாடுகள், காற்றோடுகள், பீலியோடுகள், கண்ணாடியோடுகள், சித்திர சகிதமானஓடுகள் தளவரிசைக்கற்கள், பூச்சட்டிகள் திறம் போட்லாந்து சிமெந்து முதலானவைகளும் சகாயமான விலைக்குப் பின்வரும் விலாசத்தாரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கா. வ. சுப்பிரமணியம்,
ஒட்டுக்கம்பெனி,
தேவரீர்குளம்,
(H. 23). யாழ்ப்பாணம்.

---

பல தலைமுறையாய் பிரபலபிரசித்தியடைந்த
வீ. ஸாமி அய்யங்காருடைய
## அரைக்கீரை விரைத் தைலம்.



இதன்:குணம்:

பித்த மேகநீரானது சிரசுக்கேறி அதனால் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினால் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடுங் கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், சொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும். இந்த நோட்டீசில் காணப்படாத கழுத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் அநுகூலப்படுத்தும். மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்து ஸ்நானம்பண்ணினால் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயாக்காய்தேய்த்துஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்துகொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுகந்தம் மாறாது. அன்று பகலில்மாத்திரம் [illegible]கக் கூடாது. 10 பலங் கொண்ட புட்டி[illegible]க்கு கிரயம் ரூபா 1—10—0.

பாக்கிங் போஸ்டேஜ் பிரத்தியேகம். வெளிநாடுகளுக்கு வி. பி. இல்லாததால் முன்பணம் அனுப்பவேண்டும்.

வி. எஸ். கோமளத்தம்மாள்,
மாணியுபாக்கூரர்,
8, பிராடீஸ் ரஸ்தா, மைலாப்பூர்.
(Y. 26.)

---

இனும்! இனும்!! இனும்!!!

இதனடியில் கண்ட மருந்து வாங்குகிறவர்களுக்கு மட்டில்

வைத்திய சாஸ்திரத்தில் அதிக அனுபவமுள்ள ஹக்கீம் K. முகம்மது யூசுபு அவர்களால் செய்யப்பட்ட (வைத்திய சாஸ்திர நீதிநூல்) 96 பக்கம் அடங்கிய புஸ்தகம் ஒன்று இம்மருந்துடன் இனுமாக அனுப்பப்படும். மானிட சரீரத்தில் பரவும் பல நோய்கள் வீரியபலஹீனங்கள் நரம்புத் தளர்ச்சிகள் வீரிய நஷ்டத்தின் விபரங்கள் அது ஜனித்த காரணங்களையும் அதன் குணங் குறிகளையும் அதற்கு மருந்தும் பரிகாரமும் சரீரத்தில் உள்ள சில ரகசியமான விஷயங்களையும் வைத்தியரிடம் வெளிப்படுத்தாமல் தனக்குத் தானே அறிந்துகொள்ளக்கூடிய அருமையானதோர் சாஸ்திரமாயிருக்கின்றது.

அவுஷதங்களில் அருமையான வித்தை.

ஜெகப்பிரசித்தி பெற்ற

# சிட்டுக்குருவி அமிர்த லேகியம்.

பலமில்லாமல் தளர்ந்து சோர்வடைந்த நரம்புகளையும் உலக வாழ்க்கையில் பிரியமில்லாமல் சஞ்சலப்படும் மனதையும் ஒருவேளை லேகியம் சாப்பிட்ட பிறகு ஆச்சரியப்படும்படி நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாக்கும்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதமுள்ள உண்மை அவுஷதம்
குணமில்லையென்று ருபிக்கிறவர்களுக்கு பணத்தைத் திருப்பிக் கொடுக்கப்படும்.

வீரியபுஷ்டியையும் மன உற்சாகத்தையும் கொடுப்பதில் இதற்குச் சமயாய் எதைக் காட்ட முடியும். இதனை அனுபவித்தவர்கள் இப்பெருமை தங்கிய மருந்திற்கு உள்ள அபூர்வசக்தியைப் போலே இவ்வுலகத்தில் வேறு எந்த மருந்திற்கும் இல்லையென்று அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எழுதியிருக்கிறார்கள்.

அன்பனே! இதுவரையிலும் வீரியதத்துவத்திற்காகவும் நாடி நரம்புகளின் உற்சாகத்திற்காகவும் மூளையைப் பலப்படுத்தி ஞாபகசத்தியை விர்த்திசெய்யவும் தேககாங்கையினால் நீற்றுப்போகும் பலஹீனம் பற்பல வாய்வுரோகம் இடுப்புவலி கைகால்சதி மலச்சிக்கல் பசிமந்தம் இவைகளுக்கெல்லாம் எத்தனையோ விதமான அவுஷதங்கள் சாப்பிட்டிருப்பீர்கள். அவைகளுக்கெல்லாம் இது முதல்தரமான மருந்தென்று தங்களின் சினேகிதர்பால் புகழ்ந்து பேசுவீர்கள். பத்தியமில்லை.

முக்கிய கவனிப்பு:—சில போலி சிட்டுக்குருவி லேகியங்கள் ஆயிரக்கணக்கான ரூபாய் இனுமென்று சபதங்கள் கூறிக்கொண்டு பல விளம்பரங்கள் வெளிவந்துகொண்டிருக்கிறபடியால எமது விலாசத்தைக் கவனித்து ஆடர் செய்யவேணும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 40 நாள் | 80 வேளை | டப்பி 1க்கு | விலை | ரூபா | | 10—0—0 |
| 20 ,, | 40 | ,, | ,, | ,, | ,, | 5—0—0 |
| 10 ,, | 20 | ,, | ,, | ,, | ,, | 2—8—0. |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

இந்தியா, பர்மா, சிலோன் இம்மூன்று தேசங்களுக்கும் வி. பி. யில் மருந்து அனுப்புவோம. பினங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேச வாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் சிலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணம் அனுப்பினால் மட்டில் மருந்து அனுப்பப்படும்.

விலாசம்.

ஹக்கீம் கா. முகம்மது யூசுபு,
முகம்மதியா வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, (தென்னாற்காடு ஜில்லா)

**Hakeem K. Mohamed Yoosoof,**
*Mohamedia Medical Hall,*
Porto-Novo, S. A. Dt. (INDIA)

(H. 27.)

---

4 மாசத்தில் 200 குஷ்டரோகிகள் சொஸ்தமடைந்து விட்டார்கள்!
திமிர், குஷ்டம், தீர்ந்து விட்டன!
மதமதப்புமாரி சொரணையுண்டாகி விட்டன.
தடிப்புகள் மாறிவிட்டன, பத்துகள் மறைந்து விட்டன,
சொரிகள் உதிர்ந்து விட்டன, அரிப்புகள் மாறிவிட்டன,
ர ண ங் க ள் ஆ றி வி ட் ட ன,
குன்மம், கிரந்தி, மேகமெல்லாம், தீர்ந்து, விட்டதென்று தினம்
நற்சாக்ஷிகள் வந்தவண்ணமாயிருக்கின்றன.

ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

அநேக நற்சாட்சிகளும் தங்கமேடலும் பரிசு பெற்று
உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

25-8-1923-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் மருந்து வைத்திய கண் காட்சியில் இவர் மருந்துகள் பஸ்ட் கிளாஸ் தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்திய ஆசிரியர் என்று பட்டமும் பெற்றவர்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். உத்தரவாத முள்ளது. குணம் இல்லை என்பவர்களுக்கு பணம் திரும்பக்கொடுக்கப்படும். வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர்: முப்புவைக் கண்டுபிடித்தவர்.

# தாம்பர பஸ்பம்.

சகல வியாதிக்கும் கைகண்டது.
முப்புவினால் தளுக்கற நீற்றியது. களிம்பற்றது.
வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது பத்தியமில்லை.
வியாதிகளை விபரமாய் எழுதவும்.

உங்கள் வியாதிகளை மறுமுறை திரும்பிவராமல் நிவர்த்திக்கும் வல்லமை யுடையது.

20-வருஷ காலமாய் அநேக வியாதிகளுக்குக்கொடுத்து அனுபவமுள்ளது. இந்த மருந்தினால் தீராத வியாதிகள் கிடையாது. சகல வியாதிகளுக்கும் இந்த ஒரே மருந்து போதும்! ஒருமருந்துக்கும் வசப்படாத வியாதிகளெல்லாம இந்த மருநதில் தீருவது வெகு ஆச்சரியமாக இருக்கிறது. திடீரென்று சம்பவிக்கக் கூடிய ஆபத்தான சகல வியாதிகளையும் யாவரும் பிரமிக்கும்படி வெகுசீக்கிரத்தில் நிவர்த்திக்கும். சீக்கிரத்தில் குணப்படுத்துகிறதை பார்க்கும்போது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. ஜுரம் 64-ஜன்னி 13-தோஷம் 7-ம் ஜாஸ்தியாகி எந்த மருந்திலும் தீராத சமையம் உட் கொண்டால் அந்த க்ஷணமே நிறுத்தும் 3-நாள் மருந்தே போதும். வெகு சீக்கிரம் பிரமிக்கும்படி வாய்வு 300-ம் இதில் அவசியம் தீரும்; வைத்தியர் தேவையில்லை. மேக நீரினால் பொறுக்கமுடியாத கைகால் குடைச்சலை உடனே நிறுத்தும். குறைநோய் சம்பந்தமான ஆராதமணங்களும், விரல்கள் அழுகிப்போயிருந்தாலுஞ்சரி அந்தமட்டில் புண்கள் ஆறிவிடும். பின் புண்ணாகாது. எந்த மருந்திலுந் தீராத எவ்வளவு நாள்பட்ட கிரந்தி, புண் புரைகளும் இதில் அவசியந் தீரும்; வெட்டை, முத்தி மொழிகளில் சூலை, வீக்கம், வலி, கை கால் குடைச்சல் கிரந்தி, நரைச்சல், மேக ஊரல், பத்து, அரிகிரந்தி, தடிப்பும் நரப்பு பிடித்து கை காலை முடக்கிவிடும் மேக வியாதிகளும் இதில் அவசியம் தீரும். ஜுரம், 64 ஜன்னி, 13 தோஷம், 7 வாயு, 26 மேகம், 21 குஷ்டம், 18 சூலை, 18 கிரந்தி, 6திமிர், 10 குன்மம், 8 இருமல், 8 க்ஷயம், 6 காசம், 8 மூலம், 9 பவுந்திரம், அரையாப், 8 கண்டமாலை, 9 திராணி, 6 விஷநீர், 4 விக்கல், 8 வெடிப்பு ரணம், வெள்ளை, வெட்டை, கந்திமேகம், எரிச்சல், கடுப்பு, நீரடைப்பு, கல் அடைப்பு, ஆறாதபுண், புரை, குழிபுண், புற்றுக்கட்டி, பிளவை, காக்கை வலிப்புகள், பக்கவாதம், நடுக்குவாதம், மபிமதப்பு, சூதகவாய்வு, வயிற்றுவலி முதலியசகலவித கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். அனுபவத்தில் கை கண்ட அருமையான மருந்து. 80 வேளை ரூபா 40; 40 வேளை ரூபா 20; 20 வேளை ரூபா 10; ஏழைகட்கு பாதி விலை.

வைத்திய ஆசிரியர்.
R. M. K. வேலுசாமிபிள்ளை,
(Y. 31.) சித்த ஆயுள்வேத வைத்யசாலை, பழனி.

---

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.